திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ள பிற்பட்டோர் பட்டியல் மத்திய அரசு பட்டியலில் இடம் பெறவில்லை. ஆகவே, மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ள பட்டியலை மத்திய அரசிலும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலியுறுத்தப்பட வேண்டிய அவசியம் நிச்சயமாக இந்த அரசுக்கு இல்லை. இந்திய அரசியல் சட்டம் ஆர்டிகிள் 15 கிளாஸ் 4, அதைப்போல ஆர்டிகிள் 16 கிளாஸ் 4, ஆகியவைகளின்படி மாநில அரசுக்கு அந்த அதிகாரம் அரசியல் சட்ட ரீதியாக மத்திய அரசே கொடுத்து இருக்கிறது. அப்படிப் பட்ட அதிகாரம் மத்திய அரசு கொடுத்து இருக்கிறபோது அதை அமல்படுத்தும் கடமையும் மத்திய அரசுக்கு இருக்கிறது.

மீன்வள அபிவிருத்திக் கழக பொது மேலாளர்.

*வினா எண் 544—திரு. தி. சு. நல்லதம்பி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீன்வள அபிவிருத்திக் கழகப் பொது மேலாளர் பதவிக்கு புதியதாக அதிகாரியை அரசு நியமித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மீன் அபிவிருத்திக் கழகம் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாலும், அதன் மீன் விற்பனைத் திட்டத்தை திறம்பட செயல்படுத்தும் பொருட்டும் பொது மேலாளர் பதவிக்கு பொறுப்புள்ள வியாபாரத் திறமைமிக்க ஒருவர் நியமிக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாயிற்று. அதன் பொது மேலாளராக இந்திய அரசின் கடல் பொருட்கள் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகத்தின் துணை இயக்குநர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். அவர் 1978ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 8ஆம் நாள் முதல் பணியாற்றி வருகிறார்.

திரு. டி. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இரால் வளர்ப்பை ஊக்குவிக்க அந்தப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கப் புறம்போக்கு நிலம் கொடுக்கப்பட்டு இருக்கிறதா ? அதற்கு என்று பொது மேலாளர் நியமிக்கப்பட்டுள்ளாரா ?

1979 மார்ச் 26]

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இறால் மீன்கள் வளர்க்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதை நல்ல முறையில் பரிசீலித்து அந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை அரசு கொண்டுவந்து இருக்கிறது. அதைப்பற்றிய திட்டங்களை அமல் படுத்த எங்கெங்கே நடவடிக்கை எடுக்கப்படவில்லையோ அங் கெல்லாம் எடுக்கப்படும். அதுவும் கடலோரப் பகுதியில் நிச்சய மாக செயல்படுத்தப்படும். அதற்காக தனி மேலாளர் நியமிக் கும் உத்தேசம் இந்த அரசிடம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, தமிழகத்தின் கடற்கரை ஓரங்களில் டாட்டா, பிர்லா போன்றவர்களுக்கு இறால் மீன் வளர்க்க இடம் கொடுக்கப் போவதாக பேச்சு அடிபடுகிறது. அது நிராகரிக்கப்பட வேண்டும். மீனவர்களின் கூட்டுறவு சங்கங் கள் மூலம் இறால் மீன் வளர்ப்பை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏகபோக முதலாளிகளான டாட்டா, பிர்லா போன்றவர்களுக்குக் கொடுக்க இருப்பது தடுக்கப்படவேண்டும். தவிர்க்கப்பட வேண்டும், அப்படி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : தலைவர் அவர் களே, இந்த மாமன்றத்தில் பலமுறை அரசின் சார்பில் வலியுறுத் திச் சொல்லியிருக்கிறேன். மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் பயன்பெறும் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றும் என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள் கிறேன். உருவாக்கபட்டு இருக்கிற புதிய திட்டத்தின் கீழ் மீனவர்கள் கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் முன்னுரிமை அளிக் கப்பட வேண்டும் என்று அரசு ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. சில இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் இல்லையென் றால், கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்தவர்கள் அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு முன்வர அவர்களுக்கு வசதி இல்லையென் றால் அந்த நேரத்தில் தனியார் பற்றி யோசிக்கலாம் என்பதே இந்த அரசின் நோக்கமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற வினாக்கள் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்பெறும்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற் றது என்பதைக் குறிக்கும்.]